**OS.No**. 38/2017 ரத்தினசாமி த/பெ. ராமசாமி

**PW**1 நாள். 04.08.2022

1 மற்றும் 5 பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தாக்கல் செய்துள்ள பாரா 4,5,6 ல் 2011ல் பிரின்ஸ் டையிங் நிறுவனமானது நலிவடைந்து போய் மூடப்பட்டுவிட்டது எனவும் அதிலுள்ள இயந்திரங்கள் விற்கப்பட்டு கடனுக்கு கட்டப்பட்டதாகவும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிராதில் மேற்கண்டவாறு தான் சொல்லபட்டது என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2012 ல் மீண்டும் துவக்கப்பட்டுள்ளதாக பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிராதில் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் தற்போது தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.2012 லிருந்து பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை தொடர்ந்து நடத்தி வருவதை காட்ட நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீதுகள் தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருமான வரி செலுத்தியதற்கான அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 23 தான் வருமான வரி செலுத்தியதற்கான அறிக்கையா என்றால் ஆமாம். அதில் ரெட்சண் நிறுவனத்திற்கும் சேர்த்து செலுத்தியுள்ளேன் என்றால் ஆமாம். 2 நிறுவனத்திற்கும் ஒரே உரிமையாளர் என்பதால் ஒன்றாக செலுத்தியுள்ளேன். பிரின்ஸ் டையிங் நிறுவனம் எப்போது உரிமையாளர் நிறுவனமானது என்றால் என்னுடைய அப்பா இறந்தபிறகு நான் மட்டும் தனிப்பட்ட முறையில் நடத்தி வருவதால் உரிமையாளர் நிறுவனமானது. நான் தனிப்பட்ட முறையில் உரிமையாளராக நடந்தி வருகிறேன் என்பதை காட்டுவதற்கு வங்கி கணக்கு போன்ற ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் பார்த்து தான் சொல்லவேண்டும் நான் உரிமையாளர் என்ற முறையில் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தில் தொழில் செய்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ரெட்செண் என்பதும் பிரின்ஸ் டையிங் என்பதும் தனித்தனி நிறுவனம் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ 23 ஆக தாக்கல் செய்துள்ள வருமான வரி அறிக்கையில் கடைசி 3 பக்கங்களை தவிர மீதி உள்ள பக்கங்கள் ரெட்சண் நிறுவனத்திற்கு உரியது என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் தெரியவில்லை. எனவே மேற்படி வருமான வரி அறிக்கையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொல்லி தான் ஆடிட்டர் தாயர் செய்தார். ஆங்கிலத்தில் உள்ளதால் தான் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை எந்த வருடத்திற்குரியது என்றால் 2017–2018 க்குரியது. 2012 ல் மீண்டும் துவங்கியுள்ளதாக சொல்லியுள்ளதாக நிலையில் 2013 முதல் 2016 க்கான அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரின்ஸ்டையிங் நிறுவனத்திற்கு தனியாக பேன்கார்டு உள்ளதா என்றால் ஒரே உரிமையாளர் என்பதால் ரெட்சண் நிறுனத்தின் கணக்கிலேயே செலுத்தியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி அறிக்கையில் ரெட்சண் நிறுவனத்திற்கு உண்டான அறிக்கையில் நிறுவனத்திற்கு உண்டான சொத்துக்கள், இயந்திரங்களுக்கான மதிப்புகள்,செலவுகள் தனியாக குறிப்பிட்டு காட்டப்பட்டள்ளது என்றால் அது குறித்து ஆடிட்டருக்குத்தான் தெரியும். அது போன்று எந்த ஒரு விபரமும் பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்கு

காட்டப்படவில்லை என்றால் ஆடிட்டரை தான் கேட்கவேண்டும். 2 நிறுவனத்திற்கும் தனித்தனியாக GST வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. சரக்கு மற்றும் சேவை வரி உரிமம் தனித்தனியாக வாங்கியுள்ளேனா என்றால் 2 நிறுவனத்திற்கும் ஒரே உரிமையாளர் என்பதால் தனித்தனியாக வாங்கவேண்டிய அவசியம் இல்லை. உரிமத்தில் என்ன தொழில் செய்வதற்காக பெறுகிறோமா அந்த தொழில் செய்யமுடியும் என்றால் ஆமாம். 2 நிறுவனத்தின் தொழில் என்ன என்றால் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தில் Fabric யை Wash செய்து stream calendering –ங்காக அனுப்பிவைப்போம். சாயம் மற்றும் பிளீச்சிங்செய்வதற்கு தான் GST வரும்.Wash செய்வதற்கு வராது. ரெட்சன் நிறுவனத்தில் கிளாத் கட் செய்து பனியனாக தயார் செய்கிறோம். எங்கள் நிறுவனத்தில் வேறு நிறுவனத்தின் material வாங்கி wash செய்து கொடுக்கிறோம் என்றால் ஆமாம். அவ்வாறு வேறு நிறுவனங்களிலிருந்து துணி வாங்கி wash செய்து வருவதற்கு தகுந்த ஆவணங்கள் பராமரித்து வருகிறேன் என்றால் ஆமாம். அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் வேண்டுமென்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ராஜேஸ்வரி பிளீச்சிங் நிறுவனத்தில் நான் உரிமையாளராக இருந்து நான் தாவா சொத்தில் ஆரம்பத்தில் தொழில் செய்து வந்தேன் என்றால் ஆமாம். அது சம்பந்தமாக நான் நீதிமன்றத்தில் வா.சா.ஆ 6 மற்றும் வா.சா.ஆ 7 தாக்கல் செய்துள்ளேன். அதில் உரிமையாளர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ 6,வா.சா.ஆ 7 ஐ தவிர நான் ராஜேஸ்வரி பிளீச்சிங் நிறுவனத்தில் உரிமையாளர் என்பதை காட்டுவதற்கு வேறுஆவணம் தாக்கல் செய்துள்ளனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் பெற்று தாக்கல் செய்யமுடியும். சிவசண்முகம் பிளீச்சிங் நிறுவனம் எப்போது புதுப்பிக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ 5ல் மேற்படி நிறுவனம் புதுப்பிக்கப்பட்டதற்கான விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ 5 ல் 09.10.2019 தேதியானது எதை குறிக்கிறது என்றால் தெரியவில்லை. அசல் வழக்கு எண் 38/2017 ஆனது அதிலுள்ள சொத்துக்களை பாகப்பரிவினை செய்யக்கோரியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி பிராதில் பொது சுத்திகரிப்பு நிலைய சொத்துக்களை பொறுத்து தனி வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவாசொத்துக்களை பொறுத்து 22.11.2016 தேதியில் தயாநிதி என்பவருக்கு தான செட்டில் மெண்ட் எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு தான் தெரியவந்தது. அதில் தயாநிதி தான் சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது.இந்த வழக்கில் பின்னிட்டு தயாநிதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் தனி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2016ல் அறிவிப்பு அனுப்பி பின்னிட்டு தாக்கல் செய்தேன். தயாநிதி பெயருக்கு எழுதி வைத்து தானசெட்டில் மெண்ட் பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. இது வரை நகல் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. தயாநிதி எனக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 100/2017 தாக்கல் செய்துள்ளார்என்றால் ஆமாம். அதில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் ஆமாம். அந்த வழக்கின் பிராதில் தயாநிதி என்ன விபரம் சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. தான செட்டில் மெண்ட்படிசொத்தை தயாநிதி அனுபவித்து வருவதாகவும் அவருடைய அனுபவத்தை நான் இடையூறு செய்யக்கூடாது எனவும் கோரியுள்ளார் என்றால் ஆமாம். மேற்படி

வழக்கில் இடைநிலை மனு தாக்கல் செய்து இரு தரப்பு விசாரணைக்குபிறகு வழக்கு முடியும் வரை அவருடைய அனுபவத்தை இடையூறுசெய்யக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மோசடியான ஆவணங்களை உருவாக்கி உண்மைக்குபுறம்பான தகவல்களை சொல்லி உத்தரவு பெற்றுள்ளார். நிறுவனத்திற்கான ஆவணங்கள் வங்கியில் உள்ளது. மேற்படி உத்தரவின் பேரில் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் CMANo 3/18 தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி மேல் முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு கீழமை நீதிமன்றத்தில் உத்தரவானது உறுதிசெய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. அதன் பெயரில் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. 28.12.2017 தேதியில் பொது சுத்திகரிப்பு நிறுவனத்தின் பதில் அறிவிப்பில் அவர்கள் பராமரித்து வரும் ஆவணங்கள் படி பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்கு ராமசாமி தான் உரிமையாளர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது பார்ட்னராக சேர்ந்த பிறகு என்னுடைய அப்பா மனு அனுப்பினார்.ஆனால் அதை அவர்கள் பராமரிக்கவில்லை. நிர்வாக குழு தேர்தலின் போது பங்கு தாரர் என்ற முறையில் நான் மனு அளித்ததன் அடிப்படையில் வாக்களிக்க என்னை அனுமதித்துள்ளார்கள். அவ்வாறு என் அப்பா மனு எதுவும் அளிக்கவில்லைஎன்றாலும் பங்குதாரர் என்றமுறையில் வாக்களிக்க என்னை அனுமதிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 23 பொது சுத்திகரிப்பு நிறுவனத்திடம் வந்த கடிதம் என்றால் ஆமாம். அதில் சரஸ்வதி, சுமதி ஆகியோர் பொது சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு அனுப்பியதாக குறிப்பிட்டுள்ள கடிதத்தில் உள்ள கையெழுத்துகள் மேற்படி சுமதி, சரஸ்வதி உடைய கையெழுத்துகள் இல்லை என்றால் சரியல்ல. பொது சுத்திகரிப்பு நிறுவனத்தில் இருந்து தான் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி ஆவணமானது தாவா தாக்கலுக்கு பின்னிட்டு தான் வேண்டுமென்றே தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது அவர் சொல்ல சொல்ல என்னால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

கூடுதல் சார்பு நீதிபதி,

திருப்பூர்.